# ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,

சக்கராம்பாளையம், அகரம் (po),எலச்சிப்பாளையம்,

திருச்செங்கோடு (Tk) நாமக்கல்(Dt) 637202.

Cell :99655-31727, 99655-35967


## பொதுத்தேர்வு, மார்ச் - 2019

## TENTATIVE ANSWER KEY

வகுப்பு – 11 பொதுத்தமிழ் மதிப்பெண் :90

| வ. எண் | விடை | MARK | TOTAL MARK |
|---|---|---|---|
| **I.** | **பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.)** | | **6x1=6** |
| 1 | அ) மீரா | 1 | |
| 2 | ஆ) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது ஆற்றது போற்றி உணின் | 1 | |
| 3 | அ) நடராசன் | 1 | |
| 4 | இ) வரை | 1 | |
| 5 | ஆ) கூற்றுகள் இரண்டும் சரி | 1 | |
| 6 | அ) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே - திருமூலர் | 1 | |
| **II.** | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | | **8x1=8** |
| 7 | அ) வில்லொடிந்தது | 1 | |
| 8 | இ) ஆசிரிய உரிச்சீர் | 1 | |
| 9 | ஈ) வாடிவாசல் - அ. முத்துலிங்கம் | 1 | |
| 10 | ஆ) எண்ணும்மை | 1 | |
| 11 | இ) ஆவணம் | 1 | |
| 12 | ஆ) கொள்வோன் | 1 | |
| 13 | ஆ) மகிழ்ச்சி | 1 | |
| **14**<br><br>***** | ஆ) வில்லிபாரதத்தில், 'சூரியனின் தோன்றல்' என்று குறிப்பிடப்படுபவர் யார்?<br>**(புத்தக பக்கம் எண்: 238 - ஒற்றை மேற்கோள்குறி வரும் இடங்கள் விதிகள் படி (ஆ) சரியானது)**<br>ஈ) வில்லிபாரதத்தில் "சூரியனின் தோன்றல்" என்று குறிப்பிடப்படுபவர் யார்?<br>**(புத்தக பக்க எண்: 239 - 4 வது ஒரு மதிப்பெண் வினாவின் படி (ஈ) சரியானது** | 1 | |

| III. | அ) குறுவினா(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) | | 3x2=6 |
|---|---|---|---|
| 15 | **தமிழர்கள் புகழ் பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?**<br>**புகழ்:**<br>❖ தமிழர், புகழ் கிட்டுமாயின் தம் உயிரினையும் கொடுப்பர்.<br>**பழி:**<br>❖ பழி கிட்டுவதானால் அதனால் உலகம் முழுவதும் பெறுவதாய் இருந்தாலும் கொள்ளாதவர் என்று புறநானூறு கூறுகிறது. | 1<br><br>1 | 2 |
| 16 | **'ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்' - இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்?**<br>இவ்வடிகள் இடம்பெற்ற நூல் - **நற்றிணை**<br>ஆசிரியர் - **போதனார்** | 1<br>1 | 2 |
| 17 | **'பாயிரம்' பற்றி நீ அறியும் கருத்து யாது?**<br>❖ நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும். | 2 | |
| 18 | **சிங்கி பெற்ற பரிசுப் பொருள்களாய்க் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?**<br>❖ சிலம்பு<br>❖ தண்டை<br>❖ பாடகம்<br>❖ கெச்சம்<br>❖ காலாழி | 2 | |
| | **ஆ) குறுவினா(எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** | | 2x2=4 |
| 19 | **ஐந்து விவசாய மந்திரங்கள் எவை?**<br>❖ உழப்பாடாத நிலம்<br>❖ இராசாயன உரம் இல்லாத உற்பத்தி<br>❖ பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத<br>❖ பூச்சிக்கொல்லி தெளிக்காத பயிர்ப் பாதுகாப்பு<br>❖ தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி<br>❖ ஒட்டுவிதை இல்லாமல் உயிர் விளைச்சல் என்னும் ஐந்து மந்திரங்களை உலகிற்கு வழங்கினார். | 2 | |

| | | | |
|---|---|---|---|
| 20 | **இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?**<br>❖ இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் **நாகரம், வேசரம், திராவிடம்** என்பன ஆகும். | 2 | |
| 21 | **நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாய்த் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?**<br>**நாட்டுப்புறம்:**<br>நாட்டுப்புறத்தில் எல்லாவற்றையும் விழுங்க வல்ல மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.<br>**பட்டணம்:**<br>பட்டணத்திலோ மனித சமுதாயந்தான் மிகவும் முக்கியமானதாயத் தலைதூக்கி நிற்கிறது என்கிறார், தாகூர்.<br>அங்கே மனிதனுடைய கொடூரமான தன்மை வெளிப்படுகிறது. தன் சுகதுக்கத்திற்கு மன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவதுகூட இல்லை. | 1<br><br>1 | 2 |
| **IV.** | **அ) குறுவினா(எவையேனும் ஏழனுக்கு மட்டும்)** | | **7x2=14** |
| 22 | **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**<br>**அ) அழைத்தான் – அழை + த் + த் + ஆன்**<br>அழை – பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி<br>**ஆ) மலிந்த – மலி + த்(ந்) + த் + அ**<br>மலி – பகுதி<br>த்(ந்) - சந்தி (ந் ஆனது விகாரம்)<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி | 1<br>1<br>1<br>1 | 2 |
| 23 | **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.**<br>**அ) திருவடி – திரு + அடி**<br>விதி 1 : ஏனைய உயிர் வரின் வவ்வும்<br>விதி 2 : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பு<br>**ஆ) கருங்கடல் – கருமை + கடல்**<br>விதி 1 : ஈறுபோதல்<br>விதி 2 : இனமிகல் | 1<br>1<br>1<br>1 | 2 |
| 24 | **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**<br>களி மயில் **அகவும்;**<br>புள்ளிக் கருங்குயில் **கூவும்.** | 1<br>1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 25 | **மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.**<br>அ) வினாக்குறி அடையாளம் இடவும்<br>ஆ) ஒற்றை மேற்கோள் குறியிடுக | 1<br>1 | **2** |
| 26 | **விகுதியைக் கொண்டு ஆக்கப் பெயரைக் கண்டறிக.**<br>அ) அறிவைத் தேடிப்போகுமிடம் உலகம் அறிய உதவுமிடம் (அகம்) - **நூலகம்.**<br>ஆ) வந்தால் மகிழ்ச்சி இது உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) - **வருமானம்** | 1<br>1 | **2** |
| 27 | **விடைக்கேற்ற வினா அமைக்கவும்**<br>**அ)** தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாகக் கருத்ததுப்படங்களை அறிமுகப்படுத்தியவர் **யார்?**<br>**ஆ)** நீலகேசி என்பது **எக்காப்பியங்களுள் ஒன்று?**<br>**(ஏற்ற வினா அமைத்திருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1 | **2** |
| 28 | **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.**<br>அ) புறநானூறு எட்டு**த்**தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களை**க்** கொண்டது.<br>ஆ) எண்வகை**ச்** சித்திகளை**க்** கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள் | 1<br>1 | **2** |
| 29 | **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்**<br>**கனை, கணை -** கனைத்துக் கொண்டே ஓடிய குதிரை மீது எவரோ தொடுத்த கணை பாய்ந்தது.<br>**(பொருத்தமான சொற்றொடர் அமைத்திருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 2 | |
| 30<br><br>* | **கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக.**<br>❖ பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையான இடத்தில் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவது கலைச்சொல்லாக்கம் ஆகும்.<br>**எ.கா:** Mobile Phone - அலைபேசி<br>**(கலைச்சொல்லாக்கம் - பொருள்ணீ தருக. என்று வினா தவறாக உள்ளது)** | 2 | |
| V | **சிறுவினா( எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 31 | **உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**<br>**இடம்:**<br>பாரதிதாசனின் புரட்சிக்கவி என்னும் நூலில் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டுக் கொலைக்களத்தில் | **2** | |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்தப்பட்ட உதாரன். அங்குக் கூடியிருந்தோரிடம் சில சொற்கள் பேசினான். “யானறிந்த தமிழே என் மரணத்துக்குக் காரணம் என மக்கள் தமிழை இகழுவார்களோ! மக்களே, மாசு இல்லாத உயர்ந்த தமிழை உயிராகப் போற்றுங்கள்” என்ற வேண்டினான்.<br>**பொருள்:**<br>உயர்ந்த தமிழை உங்களின் உயிராகப் போற்றுங்கள்.<br>**விளக்கம்:**<br>“நான் தமிழறிந்தவன் என்பதால் வேந்தன் தன் மகளுக்குக் கவிதை கற்பிக்க அழைத்தான்; நான் தமிழ்க்கவிஞன் என்பதால் அமுதவல்லியும் என்னைக் காதலித்தாள். அமுதம் என்று பாராட்டப்படும் தமிழ் எனது மரணத்துக்குக் காரணமானது என்று இச்சமுதாயம் நினைத்திடுமோ? எனது தாய்மொழிக்கு அப்படி ஒரு பழி வந்திடில் சகிப்பேனோ? மக்களே, உங்களை ஒன்று வேண்டுகின்றேன். மாசு இல்லாத உயர்ந்த தமிழை உங்களின் உயிராகப் போற்றுங்கள். இதுவே எனது வேண்டுகோளாகும்” என்று முழங்கினான். உதாரன். | **1**<br>**1** | **4** |
| 32 | **முல்லைத் திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.**<br>**முதற்பொருள்**<br>நிலம் : காடும் காடு சார்ந்த இடமும்<br>**பொழுது :**<br>சிறுபொழுது : மாலை<br>பெரும்பொழுது : கார்காலம்<br>**கருப்பொருள்:**<br>தெய்வம் : மாயோன்(திருமால்)<br>மக்கள் : ஆயர், ஆய்ச்சியர்<br>புள் : காட்டுக்கோழி<br>விலங்கு : மான், முயல்<br>ஊர் : பாடி<br>நீர் : குறுஞ்சுனை, கானாறு<br>பூ : முல்லை, தோன்றி | 1<br>1<br>2 | **4** |

| | | | |
|---|---|---|---|
| | மரம் : கொன்றை, காயா, குருத்தம்<br>உணவு : வரகு, சாமை<br>பறை : ஏறுகோட்பறை<br>யாழ் : முல்லையாழ்<br>பண் : முல்லைப்பண் (சாதாரி)<br>தொழில் : வரகு விதைத்தல் ஆநிரை மேய்த்தல்<br>**(எவையேனும் 7 எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | | |
| 33 | **ஹைக்கூ கவிதைகள், தத்தவப் பொருளை வெளிக் கொணரும் நுட்பத்தினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**<br>❖ வாழ்க்கை எளியது; இனியது. அதனை அதன் போக்கில் வாழவிட வேண்டும். இயற்கை பேராற்றல் மிக்கது. அஃது அன்பும் நேயமும் கருணையும் பேரழகும் மிக்கது. இயற்கையின் பேரழகை மனிதர்கள் தங்களின் இதயத்தால் உணர வேண்டும்.<br>❖ இவ்வாறு இயற்கை, மனிதன், வாழ்க்கை என முப்பரிமாணச் சிந்தனைகளை மிகவும் தத்துவ நோக்கில் வெளியிடுவன ஹைக்கூ கவிதைகள் ஆகும்.<br>❖ வாழ்க்கையில் எதுவும் நிரந்தமானதன்று. ஒன்றை இழந்தாலும் இயற்கை, இன்னொன்றைக் கொண்டு நிரப்பிவிடும் என்ற உயரிய தத்துவக் கருத்து ஹைக்கூ கவிதைகளில் வெளிப்படுகின்றன.<br>'விழுந்த மலர்<br>கிளைக்குத் திரும்புகிறது<br>அடடா! வண்ணத்துப்பூச்சி' – மோரிடாகே.<br>இயற்கையின் அமைப்பில் எதுவும் பயனற்றது அன்று; ஒவ்வொன்றுக்கும் ஒரு மதிப்பு உண்டு. நாம் அந்த மதிப்பைக் கண்டுகொண்டால் வாழ்க்கை இனிதாக இருக்கும்.<br>❖ இலையுதிர் காலத்தின் ஒரு மாலைப்பொழுதில் பட்டுப்போன ஒரு மரத்தின் கிளையில் காகம் அமர்ந்து ஓய்வெடுக்கிறது. மரமோ பட்டுப்போன மரம். அஃது இனி நிழல் தரப்போதில்லை. ஆனால், களைப்படைந்த ஒரு காக்கை ஓய்வெடுக்க இடமளிக்கிறது. | **2**<br><br>**2** | **4** |

| | | | |
|---|---|---|---|
| | இவ்வாறு அடர்த்தியான தத்துவக் கருத்துகளை எளிய மொழியில் வெளிப்படுத்தும் பண்பு ஹைக்கூ கவிதைகளும் உண்டு. | | |
| **ஆ)** | **சிறுவினா( எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.)** | | **2x4=8** |
| 34 | **தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீவிர் அறிந்த செய்திகளை விளக்குக.**<br>**தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து யாம் அறிந்த செய்திகள்:**<br>❖ கல்வி கற்கப் பிரிந்து செல்வது ஓதற்பிரிவு - தொல்காப்பியம்.<br>❖ கல்வியினால் பெருமிதம் தோன்றும் - தொல்காப்பியம்.<br>❖ ஆசிரியர் - மாணவர் ஆகியவர்க்கான இலக்கணங்கள் - தொல்காப்பியம், நன்னூல்.<br>❖ உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்று -புறநானூறு.<br>❖ துணையாய் வருவது தூய நற்கல்வி - திருமந்திரம்.<br>❖ கல்வி அழகே அழகு - நாலடியார்.<br>❖ இளமையில் கல் - ஔவையார்.<br>**(எவையேனும் நான்கு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | |
| 35 | **ஆனந்தரங்கர் வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.**<br>**நாட்குறிப்பு**<br>❖ ஆனந்தரங்கரும் தம் நாட்குறிப்பில், ஒரு நிகழ்வு எந்த ஆண்டு, எந்தத் திங்கள், எந்தக் கிழமை, எந்நேரம், எவ்விடத்தில் நிகழ்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.<br>**நாணய அச்சடிப்பு**<br>❖ 10.09.1736 ஆம் நாள் குறிப்பு பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாண அச்சடிப்பு உரிமையப் பெற்றதை விளக்குகிறது. இந்த உரிமையைப் பெறுவதற்காக ஆளுநர் செலவழித்த பெருந்தொகையையும் ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார். | 1<br>1 | **4** |

ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | **ஆற்காடு நவாபு:**<br>❖ பிரெஞ்சுக்கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை, 1746 இல் கைப்பற்றியதையும் அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபு அன்பர்தீன்கானின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டதையும் நேரில் கண்டு உரைப்பதுபோல் நாட்குறிப்பில் கூறியுள்ளார்.<br>**படையெடுப்பும் முற்றுகையும்:**<br>❖ தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயர்மீது பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ் பெற்ற ஆம்பூர்ப் போர், தஞ்சைக் கோட்டைமீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலானவற்றை வரலாற்று ஆசிரியர் போன்று ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார். | 1<br><br>1 | |
| 36 | **ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமாசாமி கூறுவன யாவை?**<br>❖ ஜீவா மேடையில் பேசும்போது வெளிப்படும் உத்திகளும் பேச்சை அமைத்திடும் அழகும் புதுமையும் நளினமும் மிக்கவை ஆகும்.<br>❖ பேச்சுக்கலைபற்றி எழுதப்பட்ட புத்தகங்களில் கூறப்பட்டுள்ள விதிகளை ஜீவா ஒருபோதும் பின்பற்றுயதில்லை.<br>❖ ஜீவா, யாரையும் பின்பற்றி, அந்தப் பாணியில் பேச மாட்டார்; தமது பேச்சுக்கலையை அவர் பிறரிடம் கற்றதும் இல்லை.<br>❖ நம் நாட்டு மக்களின் தரத்தையும் அனுபவ அறிவையும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து பேசியவர். அவர் பேசும் விஷயத்தைத் கலைநோக்கத்தோடும் கற்பனைத் திறத்தோடும் வெளிப்படுத்தி வெற்றி கண்டார். | 1<br><br>1<br><br>1<br><br>1 | **4** |

ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| VI | **எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | **3x4=12** |
| 37 | **உருவக அணி**<br>**அணி இலக்கணம்:**<br>உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடியின்றி உவமையினையே பொருளாகக் கூறுவது உருவக அணி எனப்படும். இதில் உவமேயப் பொருள் முன்னும் உவமைப் பொருள் பின்னும் அமையும்.<br><br>**சான்று:**<br>**இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்**<br>**பார்தாக்கப் பக்கு விடும்.**<br>**சான்று விளக்கம்:**<br>வறுமைக்கடலைக் கடக்க ஒருவன் கைக்கொண்ட இரத்தலாகிய காவல் இல்லாத படகு, அதன்கண் செல்லும்போது கரத்தல் என்னும் பாறை தாக்குமாயின் பிளந்துவிடும் என்பதாகும்.<br>**அணிப் பொருத்தம்:**<br>இக்குறளில் இரத்தலைப் படகாகவும், கரத்தலைப் பாறையாகவும் உருவகப்படுத்திக் கூறியதால் இஃது உருவக அணியாகும்.<br>**(அல்லது)** | 2<br><br>1<br><br>1 | **4** |
| | **பிறிதுமொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.**<br>**அணி இலக்கணம்:**<br>கவிஞன் ஒரு செய்யுளில் உவமையை மட்டும் கூறி, உவமேயத்தைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணியாகும்.<br>**சான்று**<br>"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்<br>சால மிகுந்துப் பெயின்"<br>**சான்று விளக்கம்:**<br>மிக மென்மையான மயிலிறகை அளவுக்கு அதிகமாய் வண்டியில் ஏற்றினால் அச்சும் முரிந்துவிடும்.<br>**அணிப்பொருத்தம்:**<br>மிக மென்மையான மயிலிறகை அளவுக்கு அதிகமாய் வண்டியில் ஏற்றினால் அச்சும் முரிந்துவிடும். இந்த உவமையிலிருந்து வலியவரை எளியவர் பலர் கூடி வென்றுவிடுவர் என்னும் உவமேயம் பெறப்படுகிறது. அதனால், இது பிறிது மொழிதல் அணியாகும்.<br>**(பாடப்பகுதியில் உள்ள வேறு பிறிது மொழிதலணி எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 2<br><br>1<br><br>1 | **4** |

| | | | |
|---|---|---|---|
| 38 | **கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து தொடரும் வினாக்களுக்கு விடை தருக.**<br>**அ)** சிறந்த வரலாற்று ஆசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர்.<br>ஆ) கிறித்தவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும்<br>இ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்<br>ஈ) நகராட்சிப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர் - **மயிலை. சீனி. வேங்கடசாமி** | 1<br>1<br>1<br>1 | **4** |
| 39 | **வாழ்க்கை நிகழ்வில் பழமொழி**<br>பழமொழி விளக்கம்<br>ஏற்ற வாழ்க்கை நிகழ்வினைக் கதை வடிவில் எழுதுதல் | 2<br>2 | **4** |
| 40 | **தமிழாக்கம் தருக.**<br>அ) பண்பாடு மக்களை உருவாக்காது; மக்கள் பண்பாட்டை உருவாக்குகிறார்கள்.<br>ஆ) இயற்கையில் ஒளி, வண்ணங்களைப் படைக்கும்; படங்களில் வண்ணங்கள் ஒளியை உருவாக்கும்.<br>இ) என்னுடைய அனுமதியின்றி யாரும் என்னைத் துன்புறுத்த முடியாது.<br>ஈ) வேலை செய்யும் போது நீங்கள் வேலை செய்யுங்கள். விளையாடும் போது விளையாடலாம். | 1<br>1<br>1<br>1 | **4** |
| VII | **நெடுவினா (இருபது வரிகளில்)** | | **2x6=12** |
| 41 | **பாதசாரிகளின் வழிநடைப்பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது- இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க**<br>**குன்றுதோறும் கோவில் கொண்டவன்:**<br>குன்றுதோறும் கோவில் கொண்டிருப்பவன், குமரன். அவன் அடியார்கள் ஆண்டுதோறும் காவடியெடுத்துச் சென்று, கனிந்துருகி அவன் திருவடிகளைப் பணிந்து, காணிக்கை செலுத்திவிட்டு, மனநிறைவோடு தம் மனை நோக்கிச் செல்வர்<br>**பவ நோய் போக்கும் பாலன்:**<br>பல காத தூரத்தில், தம் பவ நோயைப் போக்கும் சிவபாலன் எழுந்தருளியிருப்பினும், அவன் அடியார்கள் பலநாள் கால்நடையாகவே நடந்து | 6 | |

ஸ்ரீ வித்யபாரதி

சென்று, அவனைத் தரிசித்து, அவன் இரு பதமலரைத் தம் தலையில் சூடுவர்.

**சோர்வைப் போக்கும் சுறுசுறுப்பை உண்டாக்கும்:**

இப்படிப் பலநாள் நடந்து செல்வதால் கால் வலி ஏற்படும்: களைப்பு உண்டாகும்: சோர்வு ஏற்படும்: உள்ளத் தளர்ச்சி தலைதூக்கும். இத்தகைய உடற்றுன்பங்களை மறந்து, உற்சாகம் கொள்வதற்காக உருவாக்கப்ட்டவையே, காவடிச்சிந்துப் பாடல்கள்.

**எளிதில் வசப்படும் பாடல்கள்:**

அப்பாடல்கள் பண்டைய செய்யுள் நடையில் இருந்தால் அவற்றை மனத்தில் பதிப்பதற்கும் வாய்விட்டு எளிதில் பாடுவதற்கும் இயலாது. எனவே, காவடிப்பாடல்கள் எளிய சொற்களில், ஒரு தரம் கேட்டால் மறுமுறை எளிதில் பாடுவதற்கேற்ற சந்த நடையில் அமைந்திருக்கிறது. அப்பாடல்களை ஒரு முறை ஒருவர் பாடுவதைக் கேட்டால் மற்றவரும் சந்த நடையில் அமைந்திருக்கிறது. அப்பாடல்களை ஒரு முறை ஒருவர் பாடுவதைக் கேட்டால் மற்றவரும் நாமும் பாட வேண்டும் என உந்தும் வகையில் எதுகை மோனை அமைப்பைக் கொண்டு திகழ்கின்றன.

**"தன்னத் தனதனதானா - தன**
**தன்னத் தனதன தானா"**

இந்தச் சந்த அமைப்பை இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்பச் சொன்னால் அது கைவசப் பட்டுவிடும். இதே மெட்டில் அமைந்ததுதான்.

**"சென்னி குளநகர் வாசன்- தமிழ்**
**தேறும் அண்ணாமலை தாசன்"**

என்னும் பாடல் அடி.

அடுத்து வரும் அடி விரைந்த நடையினைக் கொண்டதாய் உள்ளது. அஃதாவது

**"தனனன்ன தனனன்ன**
**தனனன்ன தனனன்ன**
**தானா – தன்னத் தானா"**

என்னும் மெட்டில் அமைந்துள்ளது. இதையும் ஓரிரு முறை வாய்விட்டுப் படித்தால் பாட்டின் நடை, கைவந்த கலையாகிவிடும். இந்தச் சந்த ஓசையில், இப்போது

**"செகமெச்சிய மதுரக்கவி**
**யதனைப்புய வரையிற்புனை**
**தீரன்: அயில்வீரன்"**

இவ்வடியைப் பாடினால் , பாட்டின் நடை தன்வயப்பட்டுவிடும்.

| | | | |
|---|---|---|---|
| | இப்படி எளிய மெட்டில் காவடிச்சிந்துப் பாடல்கள் அமைந்துள்ளன.<br>**நெஞ்சில் நிலைநிறுத்தும் எதுகை!:**<br>மேலும், பாடல்களில் இறுதிச் சீர்களில் வாசன்-தாசன், தீரன், வீரன், கேசன்- நேசன், வா**தே**-மா**தே**' என எதுகைத் தொடைகள் அமைந்திருக்கின்றன. அவை அவ்வாறு அமைந்து அவை பாட்டை நெஞ்சில் நிலை நிறுத்திக்கொள்ள வழி செய்கின்றன.<br>**கந்தனைக் காண நல்ல தோழன்!:**<br>இவ்வாறு காவடிப் பாடல்கள் எல்லாரும் அறிந்த எளிய சொற்களால் ஆக்கப்பட்டுள்ளன; எளிதில் கைவசப்படும் சந்தத்தில் நடைபயில்கின்றன:; எதுகை மோனை அமைப்பு எவரையும் ஈர்க்கின்றன. அதனால், வழி நடந்து செல்லும் எளிய மக்களும் ஓரிரு முறை கேட்டவுடனே பாட இயல்கிறது. மேலும் அவை, களைப்பை நீக்கி, களிப்பை உண்டாக்கி விரைந்து நடந்து கந்தனைக் காண நல்ல தோழனாய் அமைகின்றன.<br>**(வினாவிற்கு ஏற்ற செய்திகள் இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | | |
| | **(அல்லது)**<br>**மதீனா நகரம் ஒரு வளத்தினை உமறுப்புலவர் எங்ஙனம் வருணிக்கிறார்?**<br>❖ மதீனா நகரில், உயரத்தில் மேருமலைக்கு ஒப்பு எனக் கூறத்தக்க அளவில் மாடங்களைக் கொண்ட மாளிகைகள் அமைந்திருந்தன.<br>❖ கடைவீதியில் கொள்வோரும் கொடுப்போரும் எழுப்பும் ஒலி கடலோசை போல் இருந்தது.<br>❖ ஒரே சீராய் அமைந்திருந்த தெருக்கள் பூமியை அளப்பன போல நீண்டு அமைந்திருந்தன.<br>❖ இனிக் கட்டுவதற்கு இடம் இல்லை எனக் கூறத்தக்க வகையில் மாடங்களைக் கொண்ட கட்டங்கள் நெருக்கமாய் அமைந்திருந்தன.<br>**கொடை நகரம்:**<br>❖ எண்ணிய பொருள் உறுதியாய்க் கிட்டும் என்று கூறத்தக்க அளவிற்கு எல்லாப் பொருள்களும் மதீனா நகரில் விற்கப்பட்டன.<br>❖ நகருக்குப் புதிதாய் வந்திருப்பவரை முகமலர்ந்து, இன்முகத்தோடு உபசரித்து, விருந்து அளித்தனர், மதீனா மக்கள்.<br>**மாநகரம்:**<br>❖ பகை, வறுமை, நோய் முதலான தீமைகள் அகன்று, நல்லாட்சி பெற்று மதீனா மக்கள் வாழ்ந்தனர். | 3<br>1<br>1 | 6 |

ஸ்ரீ விஜயா

| | | | |
|---|---|---|---|
| | **ஒளிபெற்ற மதீனா நகரம்:**<br>❖ முத்துக்களால் ஆன மாலையும் பிற தங்கம், வைரம், வைடூரியத்தால் ஆன நகைகளும் விற்பனைக்காக மதீனா நகரத் தெருக்களில் சிதறிக் கிடந்தன. | 1 | |
| 42 | **தலைமைச் செயலகம் பாடம் வாயிலாக நீவிர் அறியும் அறிவியல் கருத்துக்களை எழுதுக.**<br>**தமிழால் இயலும்!:**<br>'அறிவியல்' என்று நாம் குறிப்பிடுகின்ற 'சயின்ஸ்' என்னும் பகதி, பெரும்பாலும் மக்களால் விரும்பப்படாத ஒன்றாகவே இருக்கிறது. அதற்குக் காரணம் இரண்டு உண்டு. ஒன்று, அந்த அறிவியல் தொடர்பான நூல்கள் யாவும் ஆங்கில மொழியில் அமைந்திருப்பது. மற்றொன்று , அறிவியலைத் தமிழ்வழியில் விளக்க இயலாது என்று தமிழர்களே தவறாய்க் கருதுவதாகும்.<br>இந்நிலையில் சுஜாதா அவர்கள் எளிய நடையில் மூளையைப்பற்றி எல்லாரும் புரிந்துகொள்ளும் வண்ணம் எடுத்துரைத்திருப்பது பாராட்டத்தக்க செய்தியாகும்.<br>**இராட்சதக் குழந்தை**:<br>சென்னையிலுள்ள தலைமைச் செயலகத்தைப்பற்றி எல்லாரும் அறிவர். அது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசுச் செயலகங்களையும் கட்டுப்படுத்தி ஆள்கிறது என்பதையும் அறிவர். அந்தத் தலைமைச் செயலகம் போன்று , உடல் இயக்கத்தைத் தன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுள்ள மூளையை உடலின் 'தலைமைச் செயலகம்' எனக் குறிப்பிடுகிறார், சுஜாதா.<br>**மூளைக்கு ஏற்படும் பசி!:**<br>"மூளை ரொம்பப் பசியுள்ளது. பசி என்றால் சாம்பார் சாதம், தயிர்ச்சாதம் போன்ற பசியன்று. உயிர்வளிப்பசி. மூளைக்கு ஒரு நிமிடத்துக்கு 800 மில்லி தேவைப்படுகிறது. உடம்பின் எடையில் ஐம்பது பங்கே இருந்தாலும் குருதி, உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை அபகரித்துக்கொள்கிறது. தூங்கினாலும் விழித்தாலும் எப்போதும் 'குளுக்கோஸ் குளுக்கோஸ்' என்று அலறும் இராட்சசக் குழந்தை அது!'<br>கதை கூறுவது போலக் கூறப்படும் சுஜாதாவின் இப்பகுதிமூலம் மூளைக்குத் தேவையானவை எவை, அவை எவ்வளவானவை என ஓரளவே தமிழ்க் கற்றவனாலும் உணர இயல்கிறதன்றோ!<br>**வல மூளையா இட மூளையா?:**<br>மேலும் அவர், மூளையை இடப்பகுதி, வலப்பகுதி எனப் பிரித்துக்கொண்டு, அந்தந்தப் பகுதியின் செல்வாக்கால் மக்கள் எவ்வாறு வாழ்வில் திகழ்வர் என்றும் கூறும் பகுதி சுவையானது. இப்பகுதியைப் படிப்பவர், | 2<br><br>2<br><br>1 | 6 |

ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | படித்துவிட்டுத் தம்மையும் மற்றவரையும் ஆராய்ந்து பார்க்கத் தவறமாட்டார்கள்.<br>**மனித மூளை:**<br>மனித மூளை சுமார் 10வாட் சக்தியை உற்பத்தி செய்கின்றது. இது ஒரு சிறிய அளவிலான மின் விளக்கை எரிய வைக்கப் போதுமானது. மனித மூளை 100 பில்லியன் அதாவது பத்தாயிரம் கோடி நியூரான்கள் கொண்டது.<br>**(வினாவிற்கு ஏற்ற செய்திகள் இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 1 | |
| | **(அல்லது)**<br>**சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.**<br>**சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகள்:**<br>**தன்னுயிர் போல் மண்ணுயிர்களை எண்ணுக! :**<br>பாரதியார், 'காக்கை குருவி எங்கள் ஜாதி', 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்!' என்றார். ஆம்; தம்மை ஒத்த மனிதர்களிடத்தில் மட்டுமன்று, பிற உயிரினங்களிடமும் அன்பு செலுத்த வேண்டும் என்றார், பாரதி.<br>**அற்ப உயிர்கள் அல்ல! :**<br>ஆனால், நகர்ப்புறங்களில், மனித சமுதாயந்தான் மிகவும் முக்கியமானது என்னும் கருத்து மேலோங்கி இருக்கிறது. அங்கே தன் சுகதுக்கதிற்கு முன் பிற உயிர்களின் சுகதுக்கங்களைப்பற்றி மனிதன் எண்ணிப் பார்ப்பதுகூட இல்லை'' என்கிறார். தாகூர். காரணம், பிற உயிரிகளைச் சாதாரண உயிரிகள் என்றே அவன் கருதுகின்றான்.<br>**சாத்திரம் கூறும் கருணை!:**<br>இந்திய சாத்திரங்கள் எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுமாறு கூறுகின்றன. அதை உணர்ந்து நடந்தால் '' ஒரு பறவையின் சின்னஞ்சிறு இதயத்தினுள்ளும் வாழ்க்கையின் களிப்பு எத்துணை அதிகமாய் இருக்கும்'' என்பது புலப்படும் என்கிறார், தாகூர்.<br>**மனத்தளவில் ஏற்கவில்லை!:**<br>இயற்கையை எந்த அளவுக்கு மதிக்கிறோம்? பூக்களை எடுத்துக் கொள்வோம். அவற்றுள் எத்தனைப் பூக்களுக்குப் பெயரிட்டு நம் உள்ளத்தினுள் இடம் அளித்துள்ளோம்? எத்தனையோ பூக்கள் பூக்கின்றன. ''அவை அனைத்தையும் மனத்தினுள் மனிதன் ஏற்றுக்கொள்ளவில்லை'', என்கிறார் தாகூர். அதா.ஃ.வது ''ஸ்தூலப்பொருளுக்கு அப்பால் செல்ல இயலாமல் நம் மனம் திகைப்படைந்துவிடுகிறது,'' என்கிறார், தாகூர். | 1<br>1<br>1<br>1 | 6 |

ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | **மூல காரணம் - அலட்சிய மனப்பான்மை:** பூக்களிடம் காட்டும் அலட்சிய மனப்பான்மையைத்தான் மனிதன் பறவைகளிடமும் காட்டுகிறான். எத்தனையோ நேர்த்தியான பறவைகள் உள்ளன. அவற்றின் பெயரைக்கூட மக்கள் அறிந்திருப்பதில்லை. ''இயற்கையிடம் கொண்டுள்ள இந்த அலட்சிய மனப்பான்மை தான் நம் தோல்விகளுக்கெல்லாம் மூல காரணம். இந்த சுபாவம் காரணமாய்த்தான் நாட்டு மக்களிடமும் நமது அலட்சிய மனப்பான்மை தீவிரமாய்த் தலைதூக்குகிறது,'' என்கிறார், தாகூர். | **2** | |
| 43 | **பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?**<br>**முன்னுரை :**<br>"பாரிடைத் துயில்வோர் கண்ணிற்<br>பாய்ந்திடும் எழுச்சி நீதான்" என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப<br>'எழுத்து தெய்வம், எழுதுகோலும் தெய்வம்' என்னும் ஒப்பரிய நோக்கு பாரதியின் உள்ளத்தில் ஆழ ஊன்றிக் கால் பதித்து நின்றது. எழுதுவது அவரது இனிய பணி என்றாலும், அதைக் காசாக்கும் கலையாக அவர் கருதிடவில்லை. நாடே தம் வீடென எண்ணித் தம் கவிதைமூலம் போர் முரசம் கொட்டியவர். கவிதை என்னும கைவாள் ஒன்று மட்டும் இருந்தால் போதாது, நாளிதழ் என்னும் வேலும் இருந்தால்தான், முப்பதுகோடி மக்களை அடிமைச்சேற்றில் அழுத்தக் கருதும் ஆங்கில அரசு என்னும் அரக்கனை வெல்ல இயலும் என்று முடிவெடுத்தார்.<br>**இதழியல் தொழிலில் கால் பதித்தார் :**<br>பாரதியார், இதழியல் என்னும் ஏணியில் முதன் முதலில் கால் பதித்தது சுதேசமித்திரன் என்னும் நாளிதழ் படியில்தான். பின் பல்வேறு காரணங்களால் அவர் சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி முதலான இதழ்களில் பணியாற்றினார். இருப்பினும், அவரின் எழுத்து வேகமோ, இதயத்தில் தேங்கி நின்ற விடுதலைத்தாகமோ குன்றவில்லை.<br>**சிங்கததைச் சிறையில் பூட்டத் திட்டம் :**<br>தங்களைக் கேட்காமல் புல்லும் காற்றில் அசையக்கூடாது என்று கருதுமளவுக்கு ஆதிக்க வெறி கொண்ட ஆங்கில அரசு, தலைப்பாக்கட்டும் தமக்கென ஒரு மீசையும் கொண்ட பாரதியின் எழுத்துக்கனலைத் தாங்க இயலாது அவரைச் சிறையில் தள்ளத் தக்க தருணம் பார்த்தது. | | **6** |

ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | **எழுத்து முடங்குமே :**<br>**"உலகினை ஒன்றுசேர்க்கப் பேரறிவாளர்**<br>**நெஞ்சில் பிறந்த பத்திரிக்கைப் பெண்ணே"**<br>என்ற பாரதிதாசன் வரிகளுக்கேற்ப சிறைக்குள் சென்றால் தாம் மட்டுமன்றித் தம் எழுத்துக்களும் முடக்கப்பட்டுவிடும் என்று உணர்ந்தார், பாரதி. எனவே, கூடுவிட்டுக் கூடு பாய்வது போல் தம் பெயரை விடுத்து, ஷெல்லிதாசன், காளிதாசன், வேதாந்தி எனப் பற்பல புனைப்பெயர்களில் எழுதி, ஆங்கிலேயர் கைகளுக்கு அகப்படாமல் விடுதலைப்புயலை எழுப்பிக்கொண்டிருந்தார்.<br>**பார்த்தாலே கருத்து பதியும் :**<br>**"தென்னை மரத்தில் இருக்கும் குருத்து**<br>**பாரதியின் எழுத்தில் எளிமையாய் புரியும் கருத்து"**<br>படித்துப் புரிந்துகொள்ளத் துணை செய்யும் எழுத்துகளைவிடப் பார்த்தவுடன் கருத்தை எளிதில் புரிந்துகொள்ளச் செய்யும் திறம் கொண்டவை கருத்துப்படங்களும் கேலிச் சித்திரங்களுமாகும். இதனை நன்குணர்ந்த பாரதி தமிழ் இதழியல் துறையில் முதன் முதலாக, இந்தியா, விஜயா ஆகிய இரு இதழ்களிலும் கருத்துப்படங்களை வெளியிட்டு, முன்னோடியாய் விளங்கினார்.<br>**வாய்வீச்சுக்காரர் அல்லர், செயல்வீரர் :**<br>யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று சொல்லளவில் கூறித் தம் தமிழ்ப்பற்றை நிறுத்திக்கொண்டவரல்லர், பாரதி, 'அரைகுறையாய் ஆங்கிலக்கலப்போடு பேசுவதுதான் அறிவு இருப்பதற்கு அடையாளம்' என மூடத்தனமாய்த் தமிழ்மக்கள் கருதிக்கொண்டிருந்த அக்காலத்திலே, தம் தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவற்றை முதன் முதலில் குறிப்பிட்டவர், பாரதி. அது மட்டுமா? அன்று தமிழ்ச்செய்தித்தாள்களில் தலைப்புகளை முதலில் ஆங்கிலத்தில் அமைப்பர்; பின், அவற்றிற்குக் கீழ் தமிழ்த்தலைப்புகளை அமைப்பர். இந்த விசித்திர முறை கண்டு கொதிப்புற்றார், பாரதி. தமிழ்ச்செய்தித்தாள்களில் ஆங்கிலத்தில் தலைப்பிடுவதா எனச் சுதேசமித்திரனில் சாடிச் சீறினார்.<br>**வீழ்வேனென்று நினைத்தாயோ? :**<br>'வேலையைச் செய்வோம், சம்பளத்தைப் பெறுவோம்; வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்' எனச் சாதாரண மனிதனாய்ப் பாரதி வாழ விரும்பவில்லை. | | |

ஸ்ரீ விஜயபாரதி

| | | | |
|---|---|---|---|
| | “தேடிச் சோறுநிதம் தின்று – பல<br>சின்னஞ் சிறுகதைகள் பேசி<br>---------------------<br>-------------------------<br>வேடிக்கை மனிதரைப் போல் - நான்<br>வீழ்வேன் என்று நினைத்தாயோ!”.<br>என்று வேறு ஓர் இடத்தில் அவர் கூறியதற்கிணங்க, வேறு பல துறைகளிலும் சிறந்து விளங்குவது போல் இதழாளர் பணியிலும் முன் வரிசையில் நிற்கிறார், பாரதி.<br>**முடிவுரை:**<br>பாரதியின் கடிதங்களும், கருத்துப்படத் தொகுப்பும், இவர் நடத்திய இந்த இதழ்கள் எல்லாம் சிறப்பாகத் தொகுக்கப்பட்டு இன்றைக்கு நூலாக்கம் பெற்றுள்ளன. இவையெல்லாம் தமிழினத்தின் பேறு.<br>**(முன்னுரை, முடிவுரை, உட்தலைப்புகளோடு ஏற்ற விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)**<br>**(அல்லது)** | | |
| | **சிம்பொனித் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.**<br>சிம்பொனித் தமிழர் என்று அழைக்கப்படுவர் இசைஞானி என்றும் ராகதேவன் என்றும் கொண்டாடப்படுகின்ற இளையராஜா ஆவார்.<br>**இசைக்கொடை :** அன்னக்கிளி படத்தில் அறிமுகமான இளையராஜாவின் இசையோட்டம் தமிழர் வாழ்ந்த திசைகளில் எல்லாம் தென்றலாய் நுழைந்து புதிய வாசல்களைத் திறந்தது. புதுப்புது மெட்டுகள் இளையராஜாவிடமிருந்து தமிழ்ச் சமூகத்திற்குக் கொடையாகக் கிடைத்தன.<br>**அனுபவம் இனிது :** கண்களை மூடிக்கொண்டு இளையராஜாவின் இசையைக் கேட்கும் ஒருவர் அடையும் அனுபவம் புதிதும் இனிமையும் ஆகும். பாடல்களின் ஒவ்வொரு சரணத்திற்கு இடையிலும் இளையராஜாவின் இசைமேதைதமையை நாம் உணர முடியும்.<br>**இசைச் சங்கமம் :** பழந்தமிழ் இசையையும் உழைக்கும் மக்களின் துள்ளல் இசையையும் மனத்தை மயக்கும் வகையில் கலந்து கொடுத்தவர், இளையராஜா. பொதுமக்கள் நுகரும் திரையிசையில் கர்நாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர்; இளையராஜா கர்நாடக இசையின் பல இராகங்களைத் திரையிசையில் அறிமுகப்படுத்தினார். அதனால் திரைமெல்லிசை புதிய உயரங்களைத் தொட்டது.<br>**செவிகளைத் திருப்பிய இசை :** 1970 களின் தொடக்கத்தில் தமிழ்மக்களின் செவிகள் இந்தி உள்ளிட்ட பிறமொழிப் பாடல்களையே கேட்டுவந்தன. தமிழ்ச்செவிகளைத் | | **6** |

| | | | |
|---|---|---|---|
| | தமிழ்பாடல்களை நோக்கித் திருப்பிய பெருமை இளையராஜாவுக்கே உரியதாகும்.<br>**சாமானியரை ஈர்த்த இசை** : இசை என்பது மேட்டுக்குடி மக்களின் சொத்தன்று; அஃது எளிய மக்களின் பண்பாட்டு வெளிப்பாடு என்பதை நிறுவியவர், இளையராஜா. திரைப்படப்பாடல்களிலும் பின்னணி இசையிலும் விடுபட்டுப்போயிருந்த வாய்மொழித் தன்மையையும் யதார்த்தத்தையும் கொண்டுவந்த இளையராஜாவின் இசை சாமானியரையும் ஈர்த்தது.<br>**பண்பாட்டு வெளிப்பாடு** : இளையராஜா. தமிழ்ச்செய்யுளின் யாப்போசைக் கட்டமைப்புக்குள் இருக்கின்ற இசை ஒழுங்கைப் புரிந்துகொண்டு இசையமைத்தார். ஆகவே, அவர் இசையமைத்த பாடல்கள் செவிக்கு இனிய 'செவியுணர் கனி'களாக ஆயின; தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு வெளிப்பாடாகவும் மாறின.<br>**(முன்னுரை, முடிவுரை, உட்தலைப்புகளோடு ஏற்ற விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | |
| VII<br>44 | **அடிமாறாமல் எழுதுக**<br>**(அ) புறநானூறு**<br>உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்<br>அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்<br>தமியர் உண்டலும் இலதே; முனிவிலர்!<br>துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்<br>புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்<br>உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;<br>அன்ன மாட்சி அனையர் ஆகித்<br>தமக்கென முயலா நோன்தாள்<br>பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.<br>- **கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**<br>ஆ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்<br>கைகொல்லும் காழ்த்த **இடத்து.** | 4<br><br>2 | 6 |

ஸ்ரீ வித்யபாரதி

தமிழ்த்துறை
ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
சக்கராம்பாளையம்,அகரம் அஞ்சல், எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 637202.

CELL : 99655-31727, 99655 -35967
96775 – 58960.